REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 4உ வெள்ளி (20—9—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 5உ சனி (21—9—57) [இதழ் 84

உலக நாடுகளின் மக்கள் தொகை

வாஷிங்டன், செப். 18—

உலகின் முக்கியமான நாடுகள் சிலவற்றின் மக்கள் தொகைக் கணக்கு அதிகாரபூர்வமாகத் தரப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் மக்கள் தொகை 17,15,00,000 என்றும், சீனவின் மக்கள் தொகை 58,26,03,417 என்றும், இந்தியாவின் மக்கள் தொகை 35,68,79,394 என்றும், ரஷ்யாவின் மக்கள் தொகை 20,02,00,000 என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர்களுக்குப் பேரிடி

குடியுரிமைமறுக்கப்படுவோர் கதிஎன்ன?

'பொறுப்பு எங்களுடையதல்ல' என்கிறார் பண்டா!

'நாடற்றவர்' என்ற இந்தியாவின் கருத்தை ஆதரித்ததே இல்லையாம்

கொழும்பு, செப். 19—

'குடியுரிமை மறுக்கப்படுகிற எந்த ஒரு இலங்கை இந்தியர் பற்றிய பொறுப்பையும் இலங்கை சர்க்கார் ஏற்றுக்கொள்ளாது' என்று பிரதமர் பண்டாரநாயகா கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டார்.

'குடியுரிமை மறுக்கப்படுகிறவர்கள் நாடற்றவர்கள்; அவர்களை பற்றிய பொறுப்பு இலங்கை சர்க்காருடையதே என்ற இந்திய சர்க்காரின் கருத்தை நாம் என்றும் ஆதரித்தது இல்லை' என்றும் அவர் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

"'இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறிவிட்ட நாடற்றவர்களாயிருக்கும் இந்திய வம்சாவழியினர் பற்றிய பொறுப்பு இலங்கை சர்க்காருடையதே' என பண்டித நேரு இந்திய மக்கள் சபையில் தெரிவித்திருப்பதால், இலங்கை சர்க்கார் இந்தப் பொறுப்பை எப்படி நிறைவேற்றப் போகிறது? அல்லது, அந்தப் பொறுப்பிலிருந்து எப்படி சர்க்கார் தப்பித்துக்கொள்ளப் போகிறது?"

என்று ஒருவர் இலங்கை மக்கள் சபையில் கேட்டார்.

பிரதமர் பண்டாரநாயகா அதற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது :—

"இலங்கையிலிருக்கும் இந்திய வம்சாவழியினர், நாடற்றவர்கள் என்ற கருத்தை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை.

"குடியுரிமை கோரி மனுச் செய்துள்ள இந்திய வம்சாவழியினர், இலங்கை குடியுரிமை பெறத் தகுதியற்றவர்களானால், அவர்கள் இந்தியக் குடிமக்கள் என்றே கருதப்பட வேண்டும்; அவர்களைப் பற்றிய பொறுப்பு இந்தியசர்க்காரைப் பொறுத்ததே; இதுதான் இலங்கை சர்க்கார் கொள்கையாகும்."

மனுச் செய்துள்ள எட்டு இலட்சம் பேரில் சுமார் ஆறரை இலட்சம் பேர் குடியுரிமை மறுக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் எல்லாம் இந்தியக் குடிமக்கள் என்று இலங்கை சர்க்கார் சொல்லுகிற அதே நேரத்தில், இந்திய சர்க்கார், 'இவர்கள் இந்தியக் குடிமக்கள் அல்லர்; அவர்கள் அரசியல் சட்டத்தில் விதித்துள்ளபடி, அன்னிய நாடுகளில் உள்ள தூதவர் அலுவலகங்களில் குடியுரிமை பெற்றால்தான் இந்தியக் குடிமக்களாவர்' என்று கூறுகிறது. எனவே, குடியுரிமை மறுக்கப்படுகிறவர்கள், நாடற்றவர்களாக்கப்படுவர்.

குடியுரிமை மனுக்கள்பரிசீலனை முடிந்த பின்னர், இவர்களைப் பற்றி பண்டித நேருவுடன் பேச்சு வார்த்தை நடத்தப் போவதாக இலங்கைப் பிரதமர் முன்பு தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்றத்தில் கழக முழக்க எதிரொலி

தோழர் சம்பத் தரும் விளக்கம்

(நமது தனி நிருபர்)

சென்னை, செப். 20—

"திராவிடநாடு என்ற நமது விடுதலை முழக்கம் வடநாட்டவரில் உத்தரப் பிரதேசம், மற்றும் பீகார் மாநிலத்தவருக்கே ஆத்திரமூட்டுவதாக இருக்கிறது; இதர வடநாட்டவர், நமது இந்த முழக்கம் கேட்டு ஒன்றும் எரிச்சலடையவில்லை; முகம்கூடச் சுளிக்கவில்லை; இதற்குக் காரணம், இந்த உ. பி., பீகார் மாநிலத்தவர்தான் வேறெந்த வடநாட்டவரையும்விட, 'தென்னாடு, தங்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கவேண்டும்' என்ற ஏகாதிபத்திய வெறி மிக்கவர்களாயிருக்கின்றனர்"

என்று தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அவர்கள், நமது நிருபரிடம் நேற்று குறிப்பிட்டார்.

"பொதுவாக இந்தியாவின் அரசியலில், உ. பி., பீகார் மாநிலத்தவரின் ஆதிக்கம் வரைகடந்து நிற்பதை இதர வடநாட்டு மாநிலத்தைச் சேர்ந்தவர்களும்கூட சகித்துக்கொள்ள விரும்பாதவர்களாயிருப்பினும், அதனை வெளிப்படையாகக் கூறவும், எதிர்த்துப் போராடவும் இன்னும் அனுகூலமான சூழ்நிலைகள் உருவாகவில்லை என்று கருதுகிறார்கள்"

என்றும் தோழர் சம்பத் அவர்கள் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

"நமது இலட்சியம் பற்றித் தெரிந்துகொள்வதில், ஆவல் கொண்டவர்களை உங்களால் பாராளுமன்ற வட்டாரத்தில் சந்திக்க முடிந்ததா?"

என்று நமது நிருபர் கேட்டபோது, அவர் குறிப்பிட்டதாவது :—

"நிச்சயமாக முடிந்தது; பொதுவாக, உ. பி.-வாலாக்களைத் தவிர, இதர மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் நம்மைப் பற்றியும், நமது இலட்சியம் பற்றியும் என்னை அணுகி விளக்கம் பெற்றனர். மேலும் நமது அண்ணா அவர்களையும், பொதுச்செயலாளர் அவர்களையும் காணவும், அவர்கள் வாயிலாக மேலும் விளக்கம் பெறவும் அவாவுறுகின்றனர். உ. பி.-யைச் சேர்ந்த இரண்டொருவர் கூட நமது இலட்சியம் பற்றிய விளக்கமறிவதில் ஆர்வம் காட்டாமல் இல்லை.

"'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று நம்மைப் போல இலட்சியம் கொண்டவர்கள், வடநாட்டில் சிலரேனும் இருக்கிறார்களா?"

என்று கேட்டபோது, தோழர் சம்பத் அவர்கள் சொன்னதாவது :—

"'அப்படிப்பட்டவர்கள் பற்றி அறிய நான் முயற்சித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால், நான் மக்கள்சபையில் முதலுரை ஆற்றிய பின்னர் பேசியவர்களில், பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர், இந்திக்கு ஆதிக்கம் தேடி பஞ்சாபில் நடைபெறும் கிளர்ச்சியை மனதில்கொண்டு, 'இந்தி ஆதிக்கம் வலுக்குமானல், பஞ்சாபியர், தனி நாடு அமைப்பது பற்றி—'இந்தியா'விலிருந்து துண்டித்துக் கொள்வது பற்றி தீவிரமாக யோசிப்பர்' என்று பேசியதாகக் கேள்விப்பட்டேன். அவர் இந்தியில் பேசியதால் அவரது கருத்தை நான் அறிய முடியவில்லை. ஒரே ஒரு ஆங்கில இதழில்தான், 'இந்தியா துண்டாடப்படவேண்டி வரும்' என்று பேசியதாக வெளியிடப்பட்டிருந்தது. அவரது பேச்சின் முழு விவரம் அறிய முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறேன்; பிறிதோர் முறை அது பற்றித் தெரிவிக்கிறேன்.

"மராட்டியத்தில், உழவர் மற்றும் தொழிலாளர் கட்சித் தலைவரான காடில்கார் என்பார், எனது முதலுரை பற்றிப் பாராட்டுத் தெரிவிக்கையில், 'இன்றுதான் உண்மையான—இயற்கையான மக்கள் குரலைக் கேட்டேன்' என்று குறிப்பிட்டார். அவர், தனிநாடு இலட்சியம் பற்றிக் கருத்தறிவிக்கையில், இந்தியாவில் 'தென்னாட்டு மாநிலங்களுக்கென ஒரு கூட்டாட்சியும் (பெடரேஷன்), வடநாட்டு மாநிலங்களுக்கென ஒரு கூட்டாட்சியும் இருக்கலாம்; வேண்டுமானல் இந்த இரு கூட்டாட்சிகளும் இணைந்த ஒரு இணைப்புக் கூட்டாட்சி—ஒரு கான்பெடரேஷன்—வைத்துக்கொள்ளலாம்' என்று கருத்தறிவித்தார்.

"உ. பி.-யைச் சேர்ந்த முதிர்ந்த காங்கிரஸ் எம். பி. ஒருவர் என்னிடம் உரையாடினர்; அவர், 'ஜின்னா இப்படித்தான் தனிநாடு வேண்டும் என்று முதலில், பேரம் பேசும் நோக்குடன் கோரிக்கை எழுப்பினர்; அது எங்கே போய் முடிந்துவிட்டது பார்த்தீர்களா? அதுபோல நீங்களும், ஏதாவது பேரம் பேசுவதற்குத்தான் இப்படி தனி நாடு கோரிக்கை வைத்திருக்கிறீர்களா?' என்று கேட்டார்.

"நான் கூறினேன்—'பேரம் அல்ல எங்கள் நோக்கம்; இயற்கையான சுதந்தர தாகத்தால் எழுந்த அப்பழுக்கற்ற தேசியக் கோரிக்கைதான் திராவிடநாடு' என்பதை விளக்கினேன்; 'ஐயோ! அப்படியானல், அது மிக ஆபத்தானதாயிற்றே' என்று வருத்தப்பட்டுக் கொண்டார், அந்த காங்கிரஸ் எம். பி.

"இந்திய அரசியல் சட்டத்தில், ஒரு அடிப்படையான மாற்றம் செய்வதற்கு, இப்படித் தெரிவிக்கப்படுகிற கருத்துக்கள் எவ்வளவு தூரம் துணைபுரியும் என்று உங்களால் கூறமுடியுமா?" என்று நமது நிருபர் கேட்டார்.

பதிலளித்த தோழர் சம்பத் அவர்கள், 'பொதுவாக இன்று எல்லா அரசியல் கட்சிகளும் சோஷலிசம் பேசுகிற நிலையில், அரசியல் சட்டத்தில் அடிப்படையான மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்ற கருத்துடையோருக்கு எந்த அளவு எதிர்ப்பு இருக்குமோ அந்த அளவு ஆதரவும் பரவலாகக் கிடைக்க முடியும் என்பதை மட்டும்தான், எனது இந்த குறுகிய கால மக்கள் சபை அனுபவத்தைக் கொண்டு கூற முடியும்' என்றார்.

(முடியவில்லை)

பக்தூனிஸ்தான் கோரிக்கை

குடியரசுக் கட்சி ஏற்றுக்கொண்டு விட்டதாகத் தகவல்

கராச்சி, செப். 19—

"கொள்கையளவில், எல்லை காந்தி கபார்கான் கோரிவரும் தனிநாடு — 'பக்தூனிஸ்தான்' கோரிக்கையைக் குடியரசுக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது" என்று, லண்டன் நிருபருக்கு அளித்த பேட்டியில் பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் பெரோஸ்கான் நூன் தெரிவித்துள்ளார்.

"புஷ்து மொழி பேசும் மக்கள் தனி மாநிலம் வேண்டும் என்றால் அதை அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்; ஆனல் அது, அவர்கள் மீது திணிக்கப் படமாட்டாது"

என்றும் நூன் தெரிவித்துள்ளார்.

மேற்குப் பாகிஸ்தான் சட்டமன்றத்தில் தேசிய அவாமி கட்சியின் ஆதரவைப் பெற இந்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் ஒரு வதந்தி நிலவுகிறதாம்.

பிஜோ மனைவியுடன் அசாம் கவர்னர் பேச்சு

ஷில்லாங், செப். 18—

நாகர் சுதந்தரப் போராட்டத் தலைவர் பிஜோ தலைமறைவாக இருப்பது தெரிந்த ஒன்றாகும்.

நேற்று அசாம் கவர்னர் சையத் பாசில் அலி, பிஜோவின் மனைவியைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

சமீபத்தில் விடுதலையடைந்த பிஜோவின் உறவினரும் அப்போது உடனிருந்தனராம்.

பேச்சுவார்த்தைகளுக்குப்பிறகு பிஜோவின் மனைவி, நாகர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டு அமைதி நிலவவேண்டும் என்று தான் விரும்புவதாகக் கூறினாராம்.



இந்தியை எதிர்க்க தருணமிதுவே,

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—9—57 வெள்ளி

திருவண்ணமலை மாநாடுகள்

அடுத்த சனி, ஞாயிறு நாட்களில் திருவண்ணமலை நகரில், வட ஆற்காடு மாவட்ட முன்னேற்றக் கழக மாநாடுகள் கூடுகின்றன. அவ்விரண்டு மாநாடுகளை சீரும் சிறப்புடனும் நடத்தித் தரும் பொறுப்பை செயல் வீரர்களான நண்பர்கள் சண்முகமும்—சாரதியும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அவர்களுக்குள்ள செயல் திறமும், அத்துறையில் அவர்கள் பெற்றுள்ள தனிப் பயிற்சியும், தமிழ் மக்கள் அறிந்த ஒன்றாகும். அவர்கள் அரும் உழைப்புடன், கழக மாவட்டச் செயலாளர் முல்லைசத்தியின் உழைப்பும் ஒன்றுபட்டிருக்கும் பொழுது, மாநாடுகளின் முழு வெற்றிக்கு ஆருடமா கூற வேண்டும்?

இரண்டு மாநாடுகளில் முதல் நாள், இந்தி எதிர்ப்பு மாநாடு கூடுகிறது. இப்பெயரில் ஒரு தனி மாநாடு கூட்டவேண்டிய கட்டாயம் என்ன வந்திருக்கின்றது என்பதை அனைவரும் அறிவர்.

இந்தியை, எந்த உருவிலும் தமிழ் மக்களிடை உலவவிடக் கூடாது என்பதுதான் நமதுகழகத்தின்மூலக்கோட்பாடு. அதை மேலும் தீவிரமாக வற்புறுத்திக் கூறவேண்டிய கட்டாயத்திற்கு நாம் துரத்தப்பட்டிருக்கின்றோம், அதன் விளைவுதான் திருவண்ணமலை இந்தி எதிர்ப்பு மாநாடு.

இந்தி எதிர்ப்பு மாநாட்டை காஞ்சீபுரம் தோழர் அண்ணமலை அவர்கள் துவக்கிவைக்கப் போகின்றார். 1938-ம் ஆண்டில், கட்டாய இந்திக்கு எதிராகத் தமிழ் மக்கள் தொடுத்த போரில் பங்குகொண்டு, சிறைத் துன்பங்களை அனுபவித்தவராவார்.

அதே மாநாட்டிற்கு அருணகிரிநாத அடிகளார் தலைமை தாங்கப்போகிறார். இந்தி எதிர்ப்பு என்ற பெயரில் நடைபெறும் ஒரு மாநாட்டிற்கு அடிகளாரைவிடத் தலைமை தாங்குவதற்கு, வேறு ஒரு தக்கவரை எவராலும் தேர்ந்தெடுக்க முடியாது.

1938-ம் ஆண்டில், கட்டாய இந்திக்கு எதிராக மூண்ட பெரும் எதிர்ப்பிற்கு அடிகோலிய சிலரில், அருணகிரிநாத அடிகளார் முன்னிலையில் வைத்து எண்ணத்தக்கவராவார். அவர் தொண்டால் சிறந்தவர். கட்டாய இந்தியை எதிர்த்துத் தாய்மொழிக்கு அவர் ஆற்றிய தொண்டுக்காக, முதல் காங்கிரசு ஆட்சி அவருக்கு ஏறத்தாழ மூன்றாண்டுக்கால கடின சிறைவாசத்தைப் பரிசாக அளித்தது. அத்தகு சிறப்பு வாய்ந்தத் தாய்மொழிக் காப்பாளரை, இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குத் தலைமை தாங்க வைப்பதின் மூலம், அவர் ஆற்றியுள்ள—ஆற்றிவரும் தமிழ்த் தொண்டை ஏற்றிப் போற்றிப் பாராட்ட அ[illegible]தோர் வாய்ப்பைத் த[illegible]ளுக்குத் தேடித்தர [illegible]ன்வந்த, மாநாட்டுப் பொறுப்பாளர்களுக்குத் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

இரண்டாம் நாள் மாநாடு, நமது கழகப் பொது மாநாடாகும். அதை, நண்பர் அன்பில்-தர்மலிங்கம் துவக்கிவைக்க இருக்கின்றார்.

அவர் அறிமுகம் தேவையற்றவர். அவர் தமிகழகம் தெரிந்த சீர்தொண்டர்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கப் போகின்றவர் இளைஞர். கல்லூரிப் பட்டம் பெற்றவர். இன்னும் சட்டக் கல்லூரியில் பயின்றுகொண்டு இருப்பவர்.

சென்ற பொதுத் தேர்தலில் நெல்லிக்குப்பம் தொகுதியில் நின்று, முன்னாள் உழைப்பாளர் கட்சியின் தலைவராகவும் அமைச்சராகவும் இருந்த 'பெருந் தலைவரை' திக்குமுக்காடச் செய்திருப்பவர். அவர், நமது விடுதலைப் படைக்குக் கிடைத்திருக்கும் இளந்தளபதி.

இரண்டு நாட்களிலும் இரவு நேரங்களில் புரட்சி நடிகர் இராமச்சந்திரன் நாடகக் குழுவினர், நாடகக் கலை விருந்தளிக்கப் போகின்றனர். அக்கலை விருந்தின் அருமை பெருமைகளை நாம் விளக்கித் தெரிய வேண்டிய நிலையில் எவரும் இல்லை.

இரண்டுநாள் மாநாடுகளிலும் பொதுச் செயலாளர், அறிஞர் அண்ணா உள்ளிட்ட கழக முன்னணி வீரர்கள் பலரும், இந்தி மொழி நுழைவால் விளையும் கேடுகள் குறித்தும், நாம் விடுபடும் வழிவகை குறித்தும் விளக்கமளிக்கப் போகின்றனர். அவர்கள் உரைகளில் புதுமை மிளிரும், புதுக் கருத்துக்கள் துள்ளி விளையாடும்.

திருவண்ணமலை மாநாடுகளுக்கு, மற்ற மாவட்டங்களுக்குக் கிடைக்கக் கூடாத—முடியாத தனிச் சிறப்பு கிடைத்திருக்கிறது. அது என்ன?

நமது முன்னேற்றக் கழகம் தோன்றிய இவ்வெட்டாண்டுக் காலமாக நடைபெற்ற மாநாடுகளுக்கும், திருவண்ணமலையில் நடைபெறும் மாநாடுகளுக்கும் குறிப்பிடத் தகுந்த வேற்றுமை ஒன்று இருக்கிறது. அதாவது, இதுவரையில் நடைபெற்றுள்ள மாநாடுகள் அனைத்தும், கழகம் வெறும் பிரச்சார அமைப்பாக இருந்த நிலையில் நடைபெற்று இருப்பவைகளாகும். ஆனால் இன்று கழகம் அந்த நிலையைக் கடந்துவிட்டிருக்கிறது. பல இலட்சக்கணக்கான நாட்டு மக்களின் நல்லாதரவைப்பெற்று சட்டமன்றத்தில் நுழைந்து, நற்பணிபுரியும் வகையில் தெளிவான உருவம் பெற்றுள்ள கழகமாக நமது முன்னேற்றக் கழகம் இன்று விளங்குகிறது.

சட்டமன்றம் நுழைந்து பணிபுரியும் அமைப்பாகத் தன்னை உருவாக்கிக்கொண்ட நிலையில் நமது கழகத்தின் முதல் மாநாடு திருவண்ணமலையில் கூடுகிறது என்பது, வட ஆற்காடு மாவட்டம் பெற்ற பெறுதற்கரிய பெரும்பேறு என்றுதானே குறிப்பிடவேண்டும்? இப்பெரும்பேறு, மற்ற மாவட்டங்கள் விரும்பினாலும் வேண்டினாலும் இனி கிடைக்கக்கூடுமா? எனவே, பெறுதற்கரிய பெரும்பேறு பெற்ற திருவண்ணமலை மாநாடுகளின் தொடர்புடைய தோழர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம் —அவர்கள் தொண்டு வெல்க என வாழ்த்துகின்றோம்.

தஞ்சை மக்கள்சபை தொகுதித் தேர்தல்

மூவர் போட்டியிடுகின்றனர்

டில்லி மக்கள்சபைக்கு தஞ்சைத் தொகுதியில் மறு தேர்தல் நடைபெறுகிறது.

காங்கிரஸ் கட்சியின் அபேட்சகராக வைரவன் சேர்வையும், பொதுவுடைமையினர் சார்பாக மணலி கந்தசாமியும், சுயேச்சையாக ஓய்வுபெற்ற ஐ. சி. எஸ். அதிகாரி திரு. டி. எஸ். இராமச்சந்திரனும் இறுதியாகப் போட்டியிடுகின்றனர்.

'சட்டம் வஞ்சகர்களின் புகலிடமாகக்கூடாது'

'நீதி வழங்குவதில் தாமதம்கூடாது'

'மாறிவரும் நிலைக்கொப்ப சட்டங்கள் திருத்தப்பட வேண்டும்'

பண்டித நேரு கூறுகிறார்

புதுடில்லி, செப். 18—

"சட்டம், போக்கிரிகளின்—வஞ்சகர்களின் புகலிலமாக ஆகிவிடக் கூடாது" என்று பண்டிதர் எச்சரித்திருக்கிறார்,

மாநில சட்ட மந்திரிகள் மாநாட்டினைத் துவக்கி வைத்துப் பேசிய அவர், நீதிமன்றங்களின் நடைமுறைகளைப் பயன்படுத்திக் கொண்டு சிலர், வரி வசூலிப்பு முதலிய சட்டங்கள் அமுலாவதைத் தாமதப்படுத்தி வருவதைக் கண்டித்திருக்கிறார்.

"சட்டத்தின் கீழ் ஒருவருக்குக் கிடைத்துள்ள உரிமைகளை நான் மறுக்க விரும்பாவிடினும் இந்த முறையில் ஏதோ குறையிருப்பதை உணருகிறேன்" என்றும் பண்டிதர் குறிப்பிட்டிருக்கிறார்.

"நீதி மன்றங்களில் வழக்குகள் தொடர்ச்சியாக ஒத்திவைக்கப் படுவதின்மூலம் ஏழை—எளிய மக்களுக்கு அளவு கடந்த தொல்லைதருவது மிக அக்கிரமமாகும் — அவமானகரமானதாகும். இந்த அவமான வழியே நீடிப்பதற்கு எந்த ஒரு நாடும் சம்மதிக்க முடியாது. மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. எனவே, இப்போதுள்ள நடைமுறைகளை மாற்றியாக வேண்டும்; அப்போதுதான், மக்கள் விரைவாக நீதியைப் பெற முடியும்" என்றும் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

"1775-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டத்தை, மாறியுள்ள சூழ்நிலைக்கொப்ப, அமெரிக்காவில் இன்று திருத்திக் கொண்டிருக்கிறார்கள்; எனவே, நாமும், மாறிவரும் நிலைக்கொப்ப சட்டங்களை மாற்றிக் கொண்டாக வேண்டும்.

"நீதிமன்றங்களில் பைசலாகாமலிருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. இப்போது அந்த எண்ணிக்கை 1,64,000 என்று கூறப்படுகிறது. சில வழக்குகள் பல ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவாம். இது குறித்து விளக்கமும் தெளிவும் வேண்டும்.

"நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதின்மூலம் இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடமுடியுமா என்பதைஎல்லோரும் சிந்தித்தாக வேண்டும்" என்றும், நேரு குறிப்பிட்டுள்ளார்

'உள்நாட்டு வசதிகளைக் கொண்டே திட்டங்களை நிறைவேற்றவேண்டும்'

'வெளிநாட்டில் கையேந்தும் நிலை ஆகாது'

'புதிய சீனாவைப் பாரீர்' என்கிறார் பேராசிரியர் மகலானுபிஸ்

பம்பாய், செப். 19—

"உள்நாட்டில் உள்ள வசதிகளைக்கொண்டே, முதலீடுகளுக்கான வழிவகைகளை அதிகரித்துக்கொள்வதற்கு, எதிர்காலத்தில் இந்தியா முக்கியத்துவம் தரவேண்டும்,"

என்று, இந்தியப் புள்ளி விவர நிலையத்தின் செறியாளர் பேராசிரியர் பி. சி. மகாலனுபிஸ் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிக் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

அவர், இங்கிலாந்து ரஷ்யா போன்ற நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு இந்தியா திரும்பியுள்ளார்.

"ஆரம்பத்தில் இயந்திரங்கள் போன்றமுதலீட்டுசாமான்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்வதும்,தொழில்நுணுக்க உதவியைப் பெறவேண்டியதும் அவசியம்; ஆனால் இந்த உதவி பெரிய அளவில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படி எதிர்பார்ப்பதும் நியாயமாகாது,"

என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

"புதிய சீனா 1953—57-ம் ஆண்டுகளுக்கான முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 650 கோடி மட்டுமே கடன் பெற்றது; இந்தத் தொகையைத் திறமையுடன் செலவிட்டு இன்று தனக்குத் தேவைப்படும் அனைத்தையும் தானகவே ஈட்டிக்கொள்ளும் நிலையை அடைந்துள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் சீனா 40, 50 சதவிகிதம் இயந்திரம் போன்ற முதலீட்டு சாமான்களை உற்பத்திசெய்திருந்தது என்றும், அடுத்த 5, 6 ஆண்டுகளில் சீனாவுக்குத் தேவைப்படும் பெரிய முதலீட்டுச் சாமான்கள் 90 சதவிகிதத்தை தானே தயாரிக்கக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளதென்றும் அவர் கூறினார்.

இப்போதுசீனா ஆண்டுதோறும் ரூ. 1,000 கோடி மதிப்புக்கு ஏற்றுமதி செய்யும் நிலையை அடைந்துள்ளது என்றும்,இந்த வசதியைக் கொண்டே சீனா தனது அந்நியச் செலாவணியை ஈடுசெய்யக்கூடிய நிலை உருவாகியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

தன்னைத்தானே நம்பி வாழக்கூடிய நிலைக்கு ரூ. 650 கோடி கடன் வசதி சீனாவுக்குப் போதுமானது என்றால், இந்தியாவுக்கு இப்போது தேவைப்படும் அந்நியச் செலாவணி வசதியைப் பெரிதாகக் கருதுவதற்கில்லை என்றும், இந்தியா ஆண்டுதோறும் ரூ. 600 கோடி ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையை அடைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தியா தனக்குள்ள அந்நியச் செலாவணி வசதியைக்கொண்டும், சமுதாய அபிவிருத்திக்கான தொழில் நுணுக்க உதவியுடனும், இந்தியா தான் செய்துள்ள உள்நாட்டு முதலீட்டு வசதிகள் மூலமும் தீவிரமாக முன்னேற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'கோதாவரி தண்ணீர் நிச்சயம் கிடைக்கும்'

முதலமைச்சர் காமராசர் உறுதிமொழி

சென்னை, செப். 19—

"செங்கற்பட்டு மாவட்டத்திற்குக் கோதாவரி தண்ணீரைக் கொண்டுவருவது உறுதி; எப்படியும் இதைச் சாதிக்கவேண்டும். கடலில் வீணாகத் தண்ணீர் விழுவதை அனுமதிக்க முடியாது" —என்று, சென்னை முதலமைச்சர் காமராசர் சென்னைக்கு அடுத்து 25—வது மைலிலுள்ள காட்டூரில் நடைபெற்ற சுதந்தரப் போர் நூற்றாண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. அளகேசன், 'கோதாவரியை காவிரி, தாமிரபாணியுடன் இணைக்கமுடியும்' என்று நம்பிக்கை தெரிவித்தார்.

'இத்தகைய பெரிய திட்டங்களை, மொழி அடிப்படையில் நாட்டைத் துண்டாட வேண்டும் என்று கேட்பதன் மூலம் சாதிக்க முடியாது' என்றும், 'திராவிட நாடு கோரிக்கை முட்டாள்தனமானது' என்றும் தனக்குத் தெரிந்ததைப் பேசியுள்ளார்.

அதே விழாவில் அடுத்து பேசிய திரு. சுந்தர முதலியார், ஆரணியாற்றுத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பதைக் குறிப்பிட்டு, பேரம்பேடு கிராமத்திற்கு 'அருகே ஒரு அணை கட்டினால் சுற்றுப்புறங்களிலுள்ள 15 கிராமங்களில் சுமார் 1,000 ஏக்கர் நிலம் சாகுபடிக்குத் தயாராகும் என்றும், இத்தகைய திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெறவேண்டும் என்றும் தெரிவித்தார்.

திரண்டிடுவீர் திருவண்ணமலையில்!

‘தென்னாட்டவரின் கைகளில் பூட்டப்பட்டிருந்த விலங்குகள் அறுபட்டன’

‘கால் விலங்கு அறுபடும் காலம் வெகு தூரத்திலில்லை’

‘அதுவே தனித் திராவிடம் மலரும் நாளாகும்’

சேலத்தில் அன்பழகன் எம்.எல்.ஏ. பேச்சு

சேலம், செப். 19—

சேலம் பொன்னம்மாப்பேட்டையில் 8—9—57 இரவு நகராண்மைக் கழக உறுப்பினர் திரு. வி. கே. மன்னார் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சேலம் நகர தி. மு. கழக செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

“இந்த வட்டாரத்தில் தி. மு. கழகக் கூட்டம் அடிக்கடி நடப்பதுகண்டு மகிழ்ச்சியடைகிறேன். தேர்தல் இல்லாத சமயத்தில் கூட மக்களிடம் தி. மு. கழகம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதற்கு இதுவே சான்றாகும். கழகத்தின் பிரசாரம் வீண்போகவில்லை.

“‘சுதந்தரப் பயணம்’ என்ற படத்தை மத்திய அரசாங்கம் எடுத்தபோது தென்னாட்டுத் தியாகிகளைப்பற்றி அதில் ஒன்றும் சேர்க்கவில்லை. இதிலிருந்து வடநாட்டார் தென்னாட்டாரை கேவலமாக நடத்துகிறார்கள் என்பது புலனாகவில்லையா? வடநாட்டு மந்திரிகள் இங்கு வந்தால் அவர்களுக்குத் தென்னாட்டு மந்திரிகள் மாலை போட்டு வரவேற்கிறார்களே; அவ்வாறு தென்னாட்டு மந்திரிகள் வட நாட்டுக்குச் சென்றால் அங்குள்ள மந்திரிகள் மாலை போடுகிறார்களா? இல்லையே! எந்தவிதத்திலும் தென்னாட்டாரை வடநாட்டார் மதிப்பதில்லை.

“கட்டாயமாக இந்தியைப் புகுத்தப் பார்க்கிறார்கள்; இந்தி வந்தால் அதை எதிர்த்தே ஆகவேண்டும்.”

அடுத்து தோழர் சிற்றுளி எ. சுப்பிரமணியம் பேசுகையில்குறிப்பிட்டதாவது:—

“தி. மு. கழகத் தலைவர்களைப் பற்றி காங்கிரசார் பலர், மேடைகளில் தாக்கிப் பேசுகிறார்கள். மேடைகளைச் ‘சாக்கடை’யாக்காதீர்கள் என்று காங்கிரஸ்காரர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

“முன்பு இந்தியைக் கொண்டு வந்த இராசகோபாலாச்சாரியாரே இப்பொழுது இந்தியை எதிர்க்கிறார்; ஆகையால் இந்தியைக் கொண்டுவந்தால் அதை நாம் முழு மூச்சுடன் எதிர்க்க வேண்டும்.”

பின்பு பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

“நகைச்சுவை அரசர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களைத் தமிழ்நாடு இழந்துவிட்டது; தன் குடும்பத்தைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல், குடும்பத்திற்குச் சொத்துசேர்த்து வைக்காமல் நாட்டு நலனுக்காக என். எஸ். கே. பாடுபட்டார். பலருக்கு அவர் தர்மங்களைச் செய்துள்ளார்; தி. மு. கழகத்தின் மீது ஆழ்ந்த பற்றும் அன்பும் கொண்டிருந்தார்; அவர் மறைவு நமக்கெல்லாம் பேரிழப்பாகும்.

“சேலத்தில் தேர்தலில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் போட்டியிட்டார். அவரைத் தேர்ந்தெடுக்கத் தவறிய சேலம் மக்கள் ஏமாந்துவிட்டார்கள்.

“அரசியலில், அண்ணா தலைமையில் கண்ணியம் காப்பாற்றப் பட்டது. அண்ணா தலைமையில் தனிக்கட்சி (தி. மு. கழகம்) தோன்றியிருக்காவிட்டால் கடமை—கண்ணியம் நிறைந்தொரு கட்சியைத் தமிழ்நாட்டு மக்கள் பார்த்திருக்க முடியாது. தன்னைத் திட்டுகிறவர்களை அண்ணா திருப்பித் திட்டுவதில்லை. அண்ணா அவர்களிடமிருந்து பல பண்புகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

“தி. மு. கழகத்தோடு வாதம் செய்து காங்கிரஸ் வெற்றி பெற முடியாது. அதனால்தான் தி. மு. கழகத்தைத் திட்டிப் பேசி காங்கிரஸ்காரர்கள் திருப்தியடைகிறார்கள். நம் பேச்சுக்கு மறுப்பு சொல்ல அவர்களால் முடியாது. நேருகூட நம் பேச்சை மறுத்துக் கூறுவதில்லையே! இங்குள்ள காங்கிரஸ்காரர்களைப் போலத்தான் நேருவும் நம்மைத் திட்டிப் பேசுகிறாரே தவிர, காரண காரியம் கூறி மறுத்துப் பேசுவதில்லை.

“‘சுதந்தரப் பயணம்’ என்ற நூற்றாண்டுவிழா செய்திப் படத்தில் தென்னாட்டுத் தலைவர்களைப் புறக்கணித்தது ஏன்? ‘வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது’ என்று நாம் சொன்னபோது கிண்டல் செய்தவர்கள் இப்பொழுது, ‘வடநாடு தென்னாட்டைப் புறக்கணித்துவிட்டது’ என்று கூறுகிறார்கள்- தென்னாட்டினரைக் கேவலப்படுத்தவே வடநாட்டார் எண்ணுகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்றாகும்?

“வெள்ளையன் இந்த நாட்டை விட்டுச் சென்றுவிட்டதால் நம் மக்கள் கையில் இருந்த விலங்கு அறுபட்டது. வடநாட்டுப் பிடிப்பிலிருந்தும் நாம் விலகித் தனி நாடாக அமைத்தால்தான் நம் காலில் உள்ள விலங்கும் உடைக்கப்பட்டதாக அர்த்தம். இன்னும் 10 ஆண்டுக்குள் கால் விலங்கை உடைத்தெறியும் அளவுக்கு (வடநாட்டுப் பிடிப்பில் இருந்து விடுபட) உணர்ச்சி தோன்றியேதான் ஆகும். வெகு காலத்திற்கு வட நாட்டார் தென்னாட்டாரை அடக்கி ஆள முடியாது.

“நாங்கள் (தி. மு. கழகம்) திறமையில்லாத எதிர்க்கட்சியாக விளங்குவதாக நிதியமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார். நாங்கள் திறமையான எதிர்க்கட்சியா இல்லையா என்பதை மக்களல்லவா தீர்ப்புக் கூறவேண்டும்? சட்டசபையில் எங்கள் பேச்சுக்கு மறுத்துக்கூற அவர்களால் முடியவில்லையே!

“நாட்டு மக்கள் விரும்பும் கட்சியாக தி. மு. கழகம் விளங்குகிறது. தி. மு. கழகம் உயிரோட்டமுள்ள கட்சியாக விளங்குகிறது. நாளுக்குநாள் வளர்ந்து வரும் தி. மு. கழகத்திற்கு நீங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும்.”

(ந. கி.)

ஐ. நா.-வில் மலேயா!

நியூயார்க், செப். 17—

கடந்த ஆகஸ்டு 31-ந் தேதியன்று சுதந்தரம்பெற்ற மலேயா, ஐ. நா. சபையின் 82-வது உறுப்பினராக இன்று சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தத் தேர்வு நடைபெற்ற போது, பல நாட்டு அன்னிய இலாகா மந்திரிகளும் பார்வையாளர்களாக இருந்தனர்.

சபையின் புதிய தலைவர்

ஐ. நா. சபையின் 12-வது கூட்டத் தொடருக்கு, தலைவராக சர் லெஸ்லி மன்றோ தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

லெபனான் வெளிவிவகார மந்திரியான டாக்டர் சார்லஸ் மாலிக், இவருடன் போட்டியிடுவதாயிருந்து பின்னர் விலகிக் கொண்டார்.

சென்னை - திருவொற்றியூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

மனோகரன், கண்ணதாசன் கலந்துகொண்டனர்

சென்னை, செப். 17—

14—9—57 சனியன்று மாலை 6-30 மணிக்கு திருவொற்றியூர் சன்னதித் தெருவில், தி. மு. கழகத்தின் சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் இரா. தீனதயாளன் தலைமை வகித்தார்.

தோழர் சேலம் எச். வி. சீனிவாசன் இயக்கப் பாடல்கள் பாடினார்.

தலைவர் தனது தலைமையுரையில் கழகத்தின் கொள்கைகளையும், நோக்கத்தையும் விளக்கி சிறிது நேரம் பேசினார்.

அடுத்து பேசிய தோழர் ஆர். ஜார்ஜ் அவர்கள், கழகத்தை எதிர்ப்போர் மக்களால் வீழ்த்தப் படுவதை விளக்கியும், பண்டித நேருவின் முரண்பட்ட போக்கை எடுத்துக்காட்டியும் சொற்பொழிவாற்றினார்.

பின்னர் பேசிய தோழர் கி. மனோகரன் அவர்கள், பொதுவுடைமையாரின் தவறானப்போக்கைச் சுட்டிக்காட்டியும், அமைச்சர்கள் கழகத்தைப் பற்றி பொறுப்பற்ற முறையில் பேசுவதைக் கண்டித்தும், கழக இலட்சியத்தை விளக்கியும், 5 ஆண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை தெளிவாக்கியும் விரிவுரையாற்றினார்.

அடுத்து தோழர் அன்புரோஸ் அவர்கள் சிறிது நேரம் பேசினார்.

பின்னர், தோழர் கண்ணதாசன் அவர்கள், தொழிலாளர்களுக்கும் கழகத்துக்கும் உள்ள உறவு முறைக்கும், மற்றக் கட்சிகளுக்கும் தொழிலாளர்களுக்கும்உள்ள உறவு முறைக்கும் உள்ள வேறுபாடுகளைத் தெளிவாக்கியும், தென்னாட்டில் இந்தியைப் புகுத்துவதைக் கண்டித்தும், சொற்பொழிவாற்றினார்.

கூட்டத்தில், கலைவாணர் என். எஸ். கே. மறைவுக்கு வருத்தம் தெரிவித்தும், திருவொற்றியூர் தொழிற்சாலைகளில் இரவு 2-30 மணி வரை பணியாற்றும் தொழிலாளர்கள் சென்னையிலுள்ள தங்கள் வீடுகளுக்குச் செல்ல வசதியேற்படும்வகையில், சென்னையிலிருந்து (சினிமாக் காட்சிகள் முடிந்தபின்) திருவொற்றியூர் நோக்கிப் புறப்பட்டுவரும் பஸ்கள் திருவொற்றியூர் வரை வந்து மீண்டும் 2-30 மணிக்குத் திரும்பி சென்னைக்குப்போக ஏற்பாடு செய்யவேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★★★

வடாற்காடு மாவட்ட
தி. மு. கழக மாநாட்டு நிகழ்ச்சிகள்

★

இந்தி எதிர்ப்பு மாநாடு:

21—9—57 சனி காலை 8-30 மணிக்கு

காந்தி சிலை அருகிலிருந்து

தலைவர்கள் ஊர்வலம்

★

வரவேற்புரை

திறப்புரை: சி. வி. எம். அண்ணாமலை

தலைவரை அழைத்து முன்மொழிதலும்—வழிமொழிதலும்

தலைவர்: சுவாமி அருணகிரிநாதர்

முன்னுரை

சொற்பொழிவு:

கா. அப்பாதுரையார்
டி. வி. நாராயணசாமி
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.

இடைவேளை

★

மாலை 3-மணிக்கு:

வில்லாளன்
சி. பி. சிற்றரசு
என். வி. நடராசன்
கண்ணதாசன்
மதியழகன்
டி. கே. தாமரைச்செல்வன்
கே. ஆர். இராமசாமி
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
இரா. நெடுஞ்செழியன்
அண்ணா

தலைவர் முடிவுரை—நன்றி கூறல்

★

இரவு 10-மணிக்கு:

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நடிக்கும்

‘இன்பக் கனவு’—நாடகம்

தி. மு. க. 3-வது மாநாடு:

22-9-57 ஞாயிறு காலை 8-30 மணிக்கு

நாகூர் அனீபா-இன்னிசை

★

கொடியேற்றுதல்

வரவேற்புரை

திறப்புரை: வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.

தலைவரை அழைத்து முன்மொழிதலும்—வழிமொழிதலும்

தலைவர்: அம்பில்-தர்மலிங்கம்

முன்னுரை

சொற்பொழிவு:

காஞ்சி-கல்யாணசுந்தரம்
சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.
ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
என். வி. நடராசன்
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.

இடைவேளை:

★

மாலை 3 மணிக்கு:

நாகூர் அனீபா-இன்னிசை

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
என். எஸ். இளங்கோ
எஸ். எஸ். இராசேந்திரன்
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
நாஞ்சில் கி. மனோகரன்
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
எம். ஜி. இராமச்சந்திரன்
இரா. நெடுஞ்செழியன்
அண்ணா

தலைவர் முடிவுரை—நன்றி கூறல்

★

இரவு 10-மணிக்கு:

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நடிக்கும்

‘அட்வகேட் அமரன்’—நாடகம்

★★★

கைத்தறியின் எதிர்காலம்

20 இலட்சம் கெசம் துணி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி?

பம்பாய், செப். 18—

‘கைத்தறித் துணி ஏற்றுமதிக்கான வசதிகளை வியாபாரிகளுக்கு அரசாங்கம் செய்து தரவேண்டும்’ என்று, துணி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

வெளிநாடுகளுக்கு அதிகப்படியான கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்வதுபற்றி ஆராயப்பட்டது.

அமெரிக்காவுக்கு 18 இலட்சம் கெசம் கைத்தறித் துணியும், மேற்கு ஜெர்மனிக்கு 5 இலட்சம் கெச[illegible] கைத்தறித் துணியும் ஏற்ற[illegible] செய்ய உயர்ந்த வரம்பாக நிர்[illegible]ப்பட்டது.

திராவிட இதயத்தை டில்லிக்கு உணர்த்த

'சூபர் டெக்ஸ்'

ஆடைகள்

திருவண்ணாமலையில் நடைபெறும் வடாற்காடு மாவட்ட தி. மு. க. மாநாட்டில், சேலம்—செவ்வாய்ப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க 'சூபர் டெக்ஸ்' சர்டிங்—வேட்டி—சேலைகள் பார்வைக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டிருக்கும்.

சாதிக் கலவரங்கள் பரவுகின்றன!

சிவகங்கையிலும் தாக்குதல்கள்

வட்டங்களில் தடையுத்தரவு

சென்னை, செப், 19—

முதுகுளத்தூர் வட்டத்தில் நடைபெற்றுவரும் சாதிச் சண்டைகள் நாளுக்கு நாள், பல ஊர்களுக்கும் பரவிவருகிற அபாயநிலை வளருகிறது.

கலவரங்கள் இங்கிங்கேதான் நடைபெறுகின்றன என்றுகூற முடியாதவகையில் கிராமங்கள் தோறும் சண்டைகள் வளருகின்றன.

வகுப்புக் கலவரங்கள் இப்போது முதுகுளத்தூரிலிருந்து சிவகங்கை தாலுகாவிற்கும் பரவியிருப்பதாகக் கூறப்படுகிறது.

சுமார் 500 பேர் கூடி, சிவகங்கை தாலுகாவில் உள்ள வாடி என்ற கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்கியதாகவும், கலகம் விளைவித்ததாகவும் சுமார் 15 தாழ்த்தப்பட்டோர் வீடுகளுக்குத் தீவைத்ததாகவும் கூறப்படுகிறது.

முதுகுளத்தூர் தாலுகா முழுவதிலும் மாவட்ட அதிகாரி 144 தடையுத்தரவு பிறப்பித்து, கடுமையாக அதனை அமுல் செய்து வருகிறார்.

சிவகங்கைத் தாலுகாவைச் சேர்ந்த மற்றொரு கிராமமான பரம்பச்சேரியைச் சேர்ந்த சுமார் 200 தாழ்த்தப்பட்ட மக்கள் ஊரை விட்டு வெளியேறி, முத்தனேந்தல் இரயில் நிலையத்தில் வந்து குடிபுகுந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

முதுகுளத்தூர், பரமக்குடி வட்டார மக்கள் சாதிக் கலவரங்களால் மிகவும் பீதியுற்றிருப்பதாகவும், சிறுபான்மையினராக இருக்கும் பல சாதிக்காரர்கள் ஊர்களை விட்டே வெளியேறிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

ரேந்தை என்ற கிராமத்தில், இரண்டாம் முறையாகப் போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்திருக்கின்றனர்.

இதுவரை இந்தக் கலகங்களின் விளைவாகப் பலியானோர் தொகை 30 ஆகும் என்றும்கூறப்படுகிறது.

நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கோவாவில் துப்பாக்கிப் போர்

ஐவர் மரணம்; 12 பேருக்குக் காயம்

பெல்காம், செப், 20—

கோவாவில் தேசிய விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நடைபெற்ற தாக்குதல்களில் நேற்று நடைபெற்றுள்ள மோதுதல்தான் மிகவும் கடுமையானது என்று கூறப்படுகிறது.

தேசிய இரகசியத் தொண்டர்களைத் தாக்க போர்ச்சுகீசிய இராணுவம் இயந்திர வெடிகளையும், எரிகுண்டுகளையும் சுமார் 5,000 ரவுண்டுகள் அளவுக்குப் பயன்படுத்தியுள்ளது.

போர்ச்சுகீசியப் படையினர் எண்ணிக்கையில் அதிக அளவில் இருந்தும்கூட, 12 [illegible] தேசிய வீரர்கள் மிகவும் துணிவுடனும், தைரியத்துடனும் போரிட்டுள்ளனர்; இவர்களில் யாருக்கும் காயம்கூட ஏற்படவில்லை.

கோவா தேசிய வீரர்களுக்கும்-போர்ச்சுகீசியப் படையினருக்கும் ஆன்கான்சாவடியில் மோதுதல் ஏற்பட்டு 5 மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றுள்ளது.

இதில் 5 போர்ச்சுகீசியப் படையைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும், 12 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. சம்பவத்திற்குப் பிறகு தேசீயத் தொண்டர்கள் தலைமறைவாகச் சென்றுவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

வில்பட்டி :
22—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : துரைசாமி
பேசுவோர் :
கே. எம். எம். மேத்தா
கே. எஸ். சந்தானம்

★

அருப்புக்கோட்டை :
தியாகராயர் வாலிபர் சங்க முன்பு
22—9—57 இரவு 7 மணிக்கு
தலைவர் :
சிவ. சண்முகசுந்தரனார்
பேசுவோர் :
எம். எஸ். இராமசாமி
எஸ். கலிங்கன்
கே. ஆர். பி. மணிமொழியன்
மாலை 3 மணிக்கு ஊர்வலம் உண்டு

★

திருவில்லிபுத்தூர் :
ஆண்டாள்கோவில் முன்பு
22—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : சு. இராமதாசு
பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
மா. குருசாமி
சி. பொன்னுசாமி
சி. பி. அண்ணாமலை

★

திண்டுக்கல் :
பூச்சிநாய்க்கன்பட்டி பள்ளித் திடலில்
22—9—57 இரவு 7 மணிக்கு
தலைவர் : பி. கந்தசாமி
பேசுவோர் :
அலிசேக்மான்சூர்
என். முத்து
பி. சமதர்மம்
எம். பிச்சை

★

வால்பாரை :
ஸ்டாப் கிழமட்டத்தில்
22—9—57 பகல் 1 மணிக்கு
தலைவர் : பி. வி. ராயப்பன்
பேசுவோர் :
கே. பி. மருதமுத்து
பி. இராசமாணிக்கம்
ஜே. பி. ஜேபக்கனி

★

சின்னாளப்பட்டி :
வள்ளுவர் திடலில்
22—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பி. பொன்னம்பலம்
பேசுபவர் :
மு. இராமநாதன்
எஸ். மெய்யன்பன்

அருப்புக்கோட்டை நகர தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு :

22—9—57 காலை 10 மணிக்கு (திருநகரம்) சிந்தனை மாளிகையில் மாவட்டச் செயலாளர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் அருப்புக்கோட்டை நகரக் கழகத் துணைச் செயலாளர் தேர்வு நடைபெறும். அதுசமயம் கழக உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் உரிமைச் சீட்டுடன் தவறாது வருகை தந்து கூட்டத்தைச் சிறப்பிக்கும்படி அழைக்கப்படுகிறார்கள்.

திராவிட நாடு விடுதலை வாரக் கூட்டங்கள்

★

சென்னை 17-வது வட்டம்:

21—9—57 மாலை 6 மணியளவில், குளை கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகச் சார்பில், படிப்பக மனையில், தோழர் ரா. சா. சாதன் தலைமையில் விழா நடைபெறும்; சிறார்களுக்கு சிற்றுண்டி வழங்கப்படும்.

சென்னை 24-வது வட்டம்:

22—9—57 காலை 10 மணியளவில், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மன்றச் சார்பில் (எண் 1, வெங்கட்டம்மாள் சமாதி தெரு, சென்னை-7), தோழர் பெ. தங்கவேலர் தலைமையில் விழா நடைபெறும்; மன்றத் தோழர்கள் பலர் பேசுவர். 200 ஏழைகளுக்கு அன்னமளிக்கப்படும்.

சுந்தராபுரம் :

22—9—57 மாலை 6½ மணியளவில், கே. வி. கே. சாமி மன்றச் சார்பில், கே. வி. கே. திடலில், தோழர் சி. கே. இராமசாமி தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் சு. ஆறுமுகம், கோவை-செழியன் பேசுவர்; இரவு 9 மணிக்கு மாற்றுருப் போட்டியும், இரவு 9 மணிக்கு 'மறைந்த மாவீரர்' என்ற நாடகமும் நடைபெறும்.

காடுபட்டி :

23—9—57 மாலை 6-30 மணியளவில், தோழர் மு. சுப்பிரமணியம் தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் எம். எஸ் இராமசாமி, எஸ். செல்லத்துரை, மு. செல்வராசு, மா. வேலன் ஆகியோர் பேசுவர்.

கோவை :

22—9—57 மாலை 6 மணியளவில், புதுமலர்ச்சி படிப்பகச் சார்பில், படிப்பக முன்னிலையில் தோழர் கே. சிவசாமி தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் மு. இராமநாதன், எஸ். ஏ. இராசமாணிக்கம் பேசுவர்; லலிதா சகோதரிகள் நடன நிகழ்ச்சியும், சி. என். ஜெகன்னாதன்—சி. ஏ. என். இராசன்—சி. எஸ். வேந்தன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

திருப்புத்தூர் :

22—9—57 இரவு 8 மணியளவில், கருணாநிதி படிப்பக—தி.மு கழகச் சார்பில், படிப்பகத்தில், பிரிவினை நாள் விழாவும், படிப்பக முதலாண்டு நிறைவு விழாவும் தோழர் மரி. செபத்தி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் அ. குருசாமி, கா. காத்தமுத்து, அ. பிசசை ஆகியோர் பேசுவர்.

இடைப்பாடி :

21—9—57ல் சங்ககிரி மேட்டூர் தொகுதிகளிலுள்ள தி. மு. க. கிளைகள் சார்பில் விழா நடைபெறும்; அன்று காலை 7 மணிக்கு தோழர் டி. கே. குருநாதன் தலைமையில், வேலாயுதம் படிப்பகத்திலிருந்து சைக்கிள் ஊர்வலம் (ஒலி பெருக்கி அமைத்த மோட்டார் வண்டியுடன்) புறப்பட்டு எல்லா ஊர்களிலும் ஊர்வலமும், பிரச்சாரமும் நடைபெறும்; தோழர்கள் ப. இராமலிங்கம், இரா. தாண்டவன், ந. வரதராசன், ஆர். வி. பெருமாள், பா. பண்டரிநாதன் ஆகியோர் பிரச்சாரங்களில் பங்கேற்பர்; 21-ந் தேதியன்று—இடைப்பாடி, வெள்ளாண்டிவலசை, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, வேம்படிதாளம், இளம்பிள்ளை, கடையாம்பேட்டை, வளையசெட்டிபட்டி, சின்னப்பம்பட்டி, கச்சுவள்ளி, கோரணம்பட்டி, சடையம்பாளையம், புதுப்பாளையம், சமுத்திரம், சலகண்டபுரம் ஆகிய ஊர்களிலும்;

22-ந் தேதியன்று—பக்கனூடு, ஆடையூர், இருப்பாளி, சித்தூர், கொத்தாபாளையம், தாதாபுரம், போடிநாய்க்கம்பட்டி, கவுண்டம்பட்டி, ஆலச்சம்பாளையம், இடைப்பாடி ஆகிய ஊர்களிலும் பிரச்சாரங்கள் நடைபெறும்.

ஆனங்கூர் :

23—9—57 மாலை 5 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், ரேடியோ மைதானத்தில், தோழர் ஏ. பி. பழனியப்பன் தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் வணங்காமுடி, வி. கே. இராசு, ஏ. ஆர். மருத்துவமணி பேசுவர்.

திருப்பூர் :

22—9—57-ல், 13, 14-வது வட்டத் தி. மு. கழகங்களின் சார்பில் வாலிபாளையத்தில் விழா நடைபெறும்; காலை 9½ மணிக்கு, கொடியேற்றுதலுடன் விழா துவங்கும்; 10-30 : மாணவர் பேச்சுப்போட்டி ; மாலை 4-30 : முகமத் அலி—இராமசாமி குழுவினரால் சிலம்ப விளையாட்டு, கத்திச் சண்டை; 6-00 : பி. ஜி. தயாளன்—எம். ஆர். பாலு குழுவினரின் இன்னிசை; இரவு 7-00 : தோழர் சி. மா. கிருட்டினன் தலைமையில் பொதுக்கூட்டம், தோழர்கள் உடுமலை-நாராயணன், சு. துரைசாமி, என். பால்ராஜ், எம். கோவிந்தசாமி பேசுவர்.

நெல்லை நகர் :

22—9—57 மாலை 4-30 மணியளவில், 13-வது வட்டத் திராவிட முற்போக்கு மன்றக் கட்டிடத்தில், தோழர் ரா. கணேசன் தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

பெங்களூர்—இலக்குமணபுரி :

22—9—57 பிற்பகல் 1-30 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் கழக மனையில், தோழர் ஆர். முனுசாமி தலைமையில் விழா நடைபெறும்.

சென்னை—11-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு :

21—9—57 இரவு 8½ மணிக்கு எண் 4/88 ஏ. பிராட்வே தெருவில் உள்ள 11-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண் : 9/57

கே. வி. கே. சாமி நினைவு நாள்

திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரரும், செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்டச் செயலாளரும், தொழிலாளர்த் தலைவருமாகிய தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து 20—9—57 அன்று ஓராண்டு நிறைவு பெறுகிறது. எனவே, நாடெங்கிலுமுள்ள தி. மு. கழகக் கிளைகள் அவரது நினைவு நாளாக **29—9—57 ஞாயிறு அன்று** கொண்டாடுமாறு வேண்டிக்கேட்டுக்கொள்கிறோம்.

19—9—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர் தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திரு. வ. சுப்பையாபிள்ளை

மணி விழா

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் புலவர் திரு. ப. இராமநாதன் அவர்கள் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"'தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி' என்னும் பெயரால் நூல் வெளியீடும், விற்பனையும் புரிந்துவரும் கழகத்தின் ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களாவார். அவர்கட்கு இன்று (20—9—57) மணிவிழா நிகழ்வுறுகின்றது. தமிழகத்தில் இக்கழகம் ஒன்று மட்டுமே கூட்டுறவுப் பொது நிலைய(பப்ளிக் கம்பெனி)மாகத் தோன்றி எல்லா வகையாலும் வளர்ந்து வளர்பிறைபோல் திகழ்கின்றது.

"கழகம், தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் தொடக்க முதல் அருந்தொண்டியற்றிவரும் தன்மை அனைவரும் அறிந்ததே. இக்கழகம் பழந்தமிழ் நூல்களைப் பல்லாற்றாலும் போற்றிவருகின்றது; அழிந்து போகாவண்ணம் மிகப் பழம் பெரும் தமிழ் நூல்களைப் பேணித் தொகுத்துவருகின்றது; பழம்பெரும் புலவர்களின் நிழலுருக்களையும் தொகுத்துவருகின்றது; உரையில்லாத சங்கமருவிய அகநானூறு முதலிய உயர்ந்த நூற்கட்கு நல்லிசைப் புலவர்கள் வாயிலாகச் சிறந்தவுரை எழுதுவித்து வெளியிட்டுவருகின்றது; மொழியும் கலையும் விழுமிதாக வளரும் பொருட்டு உயர்ந்த 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்கள் வெளியீடும், உலகிற்கு ஒரு நூலான திருக்குறளுக்குப் பலவேறு உரைகளும், வடிவங்களும் ஆக்குவித்துக் கண்கவர் வனப்பினதாக அமைந்த சுவடிகளும் திருக்குறள் நாட்குறிப்பும வெளியிட்டு வருகின்றது; நூற்சுவடிகளை செம்மையான கட்டடஞ் செய்து பல்வேறு வடிவுகளில் வெளியிட்டுவருகின்றது.

"பெரும்பாலுமுள்ள சிறந்த தமிழ் நூற்கள் அனைத்தும் தட்டின்றிக் கழகத்தில் எப்பொழுதும் கிடைக்கும். இத்துணைச் சிறந்த பணிகளைத்தும் ஆட்சியாளர் திரு. வ. சு. அவர்களின் அரும்பெறல் திறமையால் ஆவனவாகும்.

"அவர்கள் கழகம் துவங்கிய காலமாகிய 1921 முதல் 1944 வரை சென்னைக் கிளை நிலைய முகவராகப் பணியாற்றினார்கள்; அதன்பின், ஆட்சியாளராகப் பணியாற்றி வருகின்றார்கள். அவர்தம் மணி விழாவைப் பாராட்டி வாழ்த்த வேண்டுவது தமிழன்பர்களுக்கும், புலவர்களுக்கும் கடமையாம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்."

மறைமலை அடிகளார் நினைவு விழா

21—9—57 மாலை 6½ மணிக்கு சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை மணவழகர் மன்ற—நக்கீரர் பட்டிமன்றச் சார்பில், மன்ற நிலையத்தில் (எண் 2, முருகேச முதலித் தெரு), திரு. ஆ. சண்முகவேலன் தலைமையில் நடைபெறும்; 'மறைமலை அடிகள் மாண்பு' என்ற தலைப்பில், திருவாளர்கள் கண்பார்துரை அரசன், எஸ். கே. சண்முகநாதன் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

திருவண்ணாமலையில் கூடுவீர்!